ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2185/64 - 2020 ජූලි මස 23 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.07.23

2185/64 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: Kadu/ Land/ 03/ 138/ UDA.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 477A, தலங்கம வடக்கு "B" கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள தலங்கம வடக்கு கிராமத்தில் (கடுவெல மாநகர சபை எல்லைப்பகுதி) அமைந்துள்ளதும், நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. Co. 9863 இல் அமைந்துள்ள 0.2235 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட 1, 2, 3 மற்றும் 4 எனக் குறிக்கப்பட்ட நான்கு (04) காணித்துண்டுகளின் எல்லைகள் பின்வருமாறு:

01. **துண்டு இல. 01**

காணியின் பெயர்: தொம்பகஹவத்த; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி மற்றும் கழிவறை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.0096 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 02**

காணியின் பெயர்: தொம்பகஹவத்த; விபரம்: தோட்டம், ஐந்து நிரந்தரக் கட்டிடங்கள், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி, இரண்டு சுவர்கள் மற்றும் கழிவறை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: என். ஜே. ஏ. கே. பி. சேனாநாயக்க, பீ. ஏ. சீ. டி. அமரசேக்கர மற்றும் ஏனையோர்கள்; விஸ்தீரணம்: 0.1279 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 03**

காணியின் பெயர்: தொம்பகஹவத்த; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி மற்றும்



*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

கழிவறை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: தினேஸ் பெரேரா மற்றும் ஏனையோர்கள்; விஸ்தீரணம்: 0.0800 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 04**

காணியின் பெயர்: தொம்பகஹவத்த; விபரம்: தோட்டம், நிரந்தரக் கட்டிடத்தின் ஒரு பகுதி; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: - ; விஸ்தீரணம்: 0.0060 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 26 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு கடுவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப் பட்ட விபரங்களையும் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 19 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதி களாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஏ. டி. வை. ஆனந்தனி,
பிரதேச செயலாளர்,
கடுவெல.

பிரதேச செயலகம்,
கடுவெல,
2020, யூலை 20.

08 - 123